அசல்

விக்ரம பங்குனி தெய்வ. விஜயன்.
30.
[13. 4. 41]
அசல் - 1 நகல் -

ௐ

No. 79
22.12.70
p. 237–239

பொன்னிசூழ் தஞ்சைப் பூவிரி நாட்டில்
மன்னிய வளமிகுப் பண்ணலங் கொழிக்குந்
தேவ நாடென்னச் சிறப்புறுந் தன்மையால்
மேவரு சுகம்பல விழைகுநர்க் களிக்கும்
சாற்றரு முத்தம தான புரந்தனில்
ஏற்றமார் தமிழ்நிலம் இழைத்த மாதவத்தால்
அமுதினு மினிதாந் தமிழ்மணங் கமழவும்
மறையவர் மரபின் மாமணிச் சுடரா
நிறைவுறு மறிவும் நிறையு மொழுக்கமும்
வாய்மையு மாண்பும் மாசுதீர் குணமும்
சீருஞ் சிறப்புந் தேசார் கீர்த்தியு
மொருங்குருக் கொண்டு உதித்த சிகாமணி
**சாமிநாதைய ரென் றிசைகூர் சான்றோய்!**
பண்டொரு சமயம் பண்ணிடு வான்டின் முன்
விண்ணோர் போற்றும் வியாச பாரதமதை
தண்டமிழ் வரைசெய் தவன்பர் ராமாநுஜாசாரியும்
தாங்களு மென்றியத் தந்தையு மான
பாங்கி லுயருமப் பரங்கிப் பேட்டை
வித்துவான் இலக்கண பிள்ளையென வியம்பு
மன்னா ரங்கசுதன் இராம கிருஷ்ணன்
என்பானில்ல மடைந்ததும் தங்கள்பால்
துன்னிய யேட்டுச் சுவடிக ளளித்தனர்
பெற்றதொன்று பெரிதுளம் மகிழ்ந்தீர்
இற்றைப் போது சிற்றறி வுடையேன்
பகவான் அரவிந்தர் பதத்துணைப் பற்றிய
பக்தியு மன்பும் பண்புறப் பெற்றவன்
முக்தியு மோனமும் முழுமுத லருளதா
எளிதி லுடைவா னியைந்தவா றவாக்கொடு
"அரவிந்தர் தத்வச் சதக"மென் றறைதரு
நூலொன் றிசைக்க நுண்ணிதிற் றேர்ந்து
சால்புடைத் தாகச் சமைத்தற் கிசைந்தயான்
தங்களின் முன்னுரைத் திருதியோ டமைத்து
இங்கதை வெளியிடற் கிசைந்தன னதுவால்
தங்கடம் சித்தம் தமியே னுவற்கு
அன்பும் வணக்கமு மார்வமுங் கொண்டு
மெய்வழி நின்ற விமலர்க் கடிமையான
தெய்வ விஜயன் செய்யும் விண்ணப்பமே.

அன்பின் தொழும்பன்
தெய்வ. விஜயன்.

மதுக்கூர்
விக்ரம ஸ்ரீ
பங்குனி மீ
30ம் நாள்

Replied 24/4

12-4-41?

அசல்

விக்ரம பாண்டி தெய்வ. விஜயன்.

Page 237-239.
தமிழ்க்
கருவூலம்

இந்தப் புத்தாண்டு அந்தமிழர்க்கும் தங்கட்கும்
புத்துணர்ச்சியையும் நீண்ட ஆயுளையும்
அளிக்க எல்லாம் வல்ல
இறைவனை வாழ்த்தி
இறைஞ்சு
கிறேன்.

அன்பு! அன்பு!! அன்பு!!!

அசல்

விக்ரம பங்குனி தெய்வ. விஜயன்.

30.

[13.4.41]

அசல் -1 நகல் -



No. 79
22.12.70
P. 237-239

தமிழ்க் கருவூலம்

MR Ry 12.4.41

Doctor U.V. Saminatha Iyer Avl,
Thyagaraja Vilas,
Thiruvetteeswaranpet
Madras.

D. Vijayan
Nadukka...

அசல்

விக்ரம பங்குனி தெய்வ. ராஜயன்.

30.

[13.4.41]

அசல் -1 நகல் -

